2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

தனியார் துறை மூலம் சிறு மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண்.41—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறையினர் சிறு மின் நிலையம் அமைக்க அனுமதி கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கெங்கு அமைப்பதாக ஆலோசிக்கப் பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே உள்ள பெரும் தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய மின்தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி திறன் கொண்ட ஒரு திட்டத்தைத் தயாரித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் இன்னும் அரசுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. அனுப்பி வைக்கப்பட்ட பிறகு அதன்மீது அரசு முடிவெடுக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் 200 மெகாவாட் மின்சாரத் துணை மின்நிலையம் அமைப்பதற்காக அனுமதி கோரி இது வரையில் தமிழ்நாட்டிலுள்ள தொழிலதிபர்களிடமிருந்து ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்க வேண்டும் என்று தகவல் அனுப்பி இருக்கிறார்கள். திட்டத்தை டாட்டா நிறுவனத்தின் மூலம் தற்போதுதான் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலை அளித்திருக்

1982 செப்டம்பர் 10]

கிறார்கள். அதைப்பற்றி தொழிலதிபர்கள் ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் அந்தத் திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைப்பார்கள்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியார் அமைக்கும் மின் நிறுவனத்தில் பெறப்படும் மின்சாரத்திற்கு மின் கட்டண வீதங்கள் அரசு வைத்திருப்பதைப்போல நிர்ணயிக்கப் படுமா அல்லது வேறு கட்டணங்கள் நிர்ணயிக்க அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் உற்பத்தி நிறுவனம் தங்களுடைய தேவையை தாங்களே நிறைவு செய்து கொள்ள வழி வகுக்கிறது. கூடுதலான மின் உற்பத்தி இருக்குமானால் அதை மின் வாரியம் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பதைப்பற்றி அவர்களோடு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும்.

திரு. கோவைதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சிறு மின் நிறுவனங்களை அமைக்க அரசு அனுமதி தர முன்வருவது தமிழக வளர்ச்சிக்கு உகந்ததாக அமையுமா? வேறு எந்த மாநிலங்களிலாவது இப்படித் தனியார் துறைகள் சிறு மின் நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேறு சில மாநிலங்களிலும் இத்தகைய நடவடிக்கைகள் இப்போது உள்ளன. நம்மைப் பொறுத்தவரையில், மின்சக்தி என்பது பெரும் பற்றாக்குறை. மாநில அரசும், மத்திய அரசும் போடுகிற முதலீடு தவிர, மற்றவர்களும் ஆங்காங்கே முதலீடு போட்டு, தங்களுடைய மின் தேவையை நிறைவு செய்து கொள்வதற்கு மின் உற்பத்தி செய்ய முன் வருவார்களானால் இதை ஆதரிக்க வேண்டிய நிலையிலேதான் தமிழக அரசு உள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.அன்ட். சி.மில் கம்பெனியார் அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்கிறார்கள். மீதம் அதிகமாக இருப்பதாக அறிகிறேன். அப்படி, அதிகமாக இருக்கிற அந்த மின்சாரத்தை—என் பகுதியில் அடிக்கடி மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது—எனவே அதிகமாக இருக்கிற அந்த மின்சாரத்தை பயன்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிகமாக இருக்கிறதா என்று பார்த்து அரசு பரிசீலிக்கும்.